## பிரிவு – 4

## பேரூராட்சிகள்

**2.4.1.** பேரூராட்சிகள் முதற்கண் தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் ஏற்படுத்தப்பட்டன. பேரூராட்சிகள் ஊராட்சி ஒன்றியக் குழுக்களின் உறுப்புகளாக இருந்தன. அறுபதுகளின் முற்பகுதியில் செயல்படுத்தப்பட்ட சமுதாய வளர்ச்சித் திட்டங்கள் அனைத்தும் பேரூராட்சிகளால் நிறைவேற்றப்பட்டன. பேரூராட்சிகளின் தோற்றுவாய் முந்தைய சட்டங்களில் அவற்றின் நிலைமைகள் வேலைவாய்ப்புகளை நோக்கமாகக் கொண்ட பல்வேறு திட்டங்களின் கீழ் மத்திய அரசு ஊராட்சிகளுக்கு நிதி ஆதாரங்களை ஒதுக்கீடு செய்த போது, அவற்றின் பெயர்கள் எவ்வாறு பேரூராட்சிகளையும் தமிழ்நாட்டையும் வெகுவாகப் பாதித்தன என்பனவெல்லாம் குறித்து அமைப்பு மற்றும் அதிகாரங்கள் தொடர்பான பாகம் IV–ல் விரிவாக விவரிக்கப்பட்டுள்ளது. ஊராட்சிகளைப், பேரூராட்சிகளாக நிலை உயர்த்துவதற்கு வரையறுக்கப்பட்டுள்ள கூறுகளை தற்போதுள்ள பேரூராட்சிகளில் பெரும்பாலானவை நிறைவு செய்யவில்லை. ஒரு சில பேரூராட்சிகளைத் தவிர பெரும்பாலான பேரூராட்சிகள் இன்னமும்கூட நகரத்தன்மையுடையனவாக இல்லை. அந்த ஒரு சில பேரூராட்சிகளும் நிதி வகையில் மிகவும் நொடிந்து போயுள்ளன. அவை பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்டுவிட்டதால், ஊராட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய நிதியுதவியை அவை இழந்துவிடுகின்றன. மற்றும் பணியாளர் அமைப்பு முறையில் அவற்றிற்குக் கூடுதல் பொறுப்புகளும் வந்து சேர்ந்து விடுகின்றன.

**2.4.2.** தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் அடிப்படையில் தற்போது பேரூராட்சிகளுக்குள்ள வருவாய் ஆதாரங்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:–

1. வீட்டு வரி
2. தொழில் வரி
3. வாகன வரி
4. குறிப்பிட்ட நோக்கங்களுக்கான வேளாண்மை நிலங்கள் மீதான வரி

**2.4.3.** 1991–92 முதல் 1993–94 வரையிலான ஆண்டுகளில் இந்த நிதி ஆதாரங்கள் மூலம் கிடைத்த வருவாய் விவரங்கள் வருமாறு:–

**அட்டவணை 2.35. பேரூராட்சிகள் – சொந்த வரி வருவாய் இனங்கள்**

(ரூபாய் கோடியில்)

| சொந்த வரிகள் | 1991/92 | | 1992/93 | | 1993/94 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| வீட்டுவரி | 15.67 | 72.89 | 15.92 | 79.80 | 16.82 | 49.58 |
| தண்ணீர்வரி | 1.48 | 6.90 | 1.56 | 7.82 | 1.74 | 5.12 |
| தொழில்வரி | 4.04 | 18.77 | 2.12 | 10.64 | 14.89 | 43.87 |
| சரக்கு வண்டிகள் மற்றும் கால்நடைகள் மீதான வரி | 0.01 | 0.06 | 0.01 | 0.04 | 0.15 | 0.43 |
| வண்டிகள்/வாகனங்கள் மீதான வரி | 0.06 | 0.27 | 0.06 | 0.29 | 0.06 | 0.17 |
| வேளாண்மை நிலங்கள் மீதான வரி | 0.07 | 0.32 | 0.07 | 0.34 | 0.10 | 0.29 |
| யாத்ரீகர் வரி | 0.17 | 0.79 | 0.21 | 1.07 | 0.18 | 0.52 |
| சொந்த வரி மொத்தம் | 21.50 | 100.00 | 19.95 | 100.00 | 33.94 | 100.00 |

**வீட்டு வரி**

**2.4.4.** பேரூராட்சிகள் வீட்டுவரி விதிக்கின்றன; ஏனைய நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகள் சொத்துவரி விதிக்கின்றன. சொத்துவரிக்கும் வீட்டு வரிக்கும் இடையே அவற்றின் கூறுகளில் காணப்படும் வேறுபாடு யாதெனில், வீட்டு வரி கட்டிடத்திற்கு மட்டுமே விதிக்கப்படுகிறது. கட்டிடத்தின் மீதும் அந்தக் கட்டிடத்தைச் சார்ந்த நிலத்தின் மீதும் விதிக்கப்படுவது சொத்து வரி. சொத்துவரியில் பணிக்கூறுகள் உள்ளன; ஆனால் வீட்டுவரியில் அத்தகைய பணிக்கூறுகள் இல்லை. பேரூராட்சிகள் அரசியலமைப்புச் சட்டத்தின் 74–வது திருத்தத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு, 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின்கீழ் மாறிவரும் பகுதியாகச் (Transitory Area) சேர்க்கப்பட்ட போதிலும், அவை மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் கீழ் வரி விதிப்பிற்கு உட்படுத்தப்படும் வரையில் தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் அதே அளவு வரிகளே விதிக்க தொடர்ந்து அனுமதிக்கப்படுகின்றன.

**2.4.5.** மாவட்ட அமர்வுகளின் போதும், பேரூராட்சிகளின் நிருவாக அலுவலர்களின் கூட்டத்திலும் நகராட்சி வரி விதிப்புக்கு மாற்ற வலியுறுத்தப்பட்டது. இந்த அமைப்புகள் கிராம மற்றும் நகரப் பகுதிகளுக்கிடைப்பட்ட மாறிவரும் பகுதியாகக் கருதப்பட்டாலும் நகராட்சி வரி விதிப்புக்கு மாற்றப்பட அனுமதிக்கப்படலாம். இதனால், அவை நகராட்சிகளாக நிலை உயர்த்தப்படும்போது அனைத்து வரி விதிப்புக் கொள்கைகளையும் பின்பற்றுவதில் எவ்வித இடையூறும் இருக்காது.

**2.4.6.** தற்போது வீட்டுவரி விதிப்பில் பணிக்கூறுகள் எவையும் இல்லை. பாதுகாக்கப்பட்ட குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றும் பேரூராட்சிகள் மட்டுமே பொதுச் சுகாதாரச் சட்டத்தின் கீழ் வீட்டுவரியுடன் தண்ணீர் வரியும் விதிக்கின்றன. சொத்து வரியின் கீழ் துப்புரவு வசதி, விளக்கு வசதி,

குடிநீர், வடிகால் வசதி போன்ற பல்வேறு பணிகளுக்கான கூறுகள் சேர்க்கப்பட்டுள்ளன. பேரூராட்சிகளுக்கு தொடக்கக் கல்வி தொடர்பான பொறுப்புகள் இல்லாததால், கல்வி வரி விதிப்பது இயலாது. பேரூராட்சிகள், ஏனைய நகர்ப்பகுதி உள்ளாட்சி அமைப்புகளுக்கு இணையாக பொது நோக்கச் சொத்து வரியையும் குடிநீர், வடிகால் பணி, விளக்கு வசதி, துப்புரவு ஆகியவற்றை உள்ளடக்கிய பணி வரியையும் விதிக்கலாம்.

**2.4.7.** தற்போது வீட்டுவரி, ஆண்டு வாடகை மதிப்பு அடிப்படையில் உயரளவாக 20 சதவீதத்தில் அல்லது ஆண்டு மூலதன மதிப்பில் 1 சதவீதத்தில் விதிக்கப்படுகிறது. பெரும்பாலான பேரூராட்சிகள் ஆண்டு வாடகை மதிப்பு அடிப்படையில் வரி விதிக்கத் தொடங்கிவிட்டன. வரி வீதம் 5 சதவீதத்திலிருந்து 20 சதவீதம் வரையில் வேறுபடுகிறது. வீட்டு வரி மூலம் கிடைக்கும் வருவாய் குறித்த விவரங்கள் வருமாறு:–

**அட்டவணை 2.36. பேரூராட்சி – வீட்டுவரி – வரி விதிக்கப் பெறுபவர்களின் எண்ணிக்கை**

| | வரிவிதிக்கப் பெறுபவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | சதவீதம் | வசூலான கேட்புத் தொகை (ரூபாய் கோடியில்) | சதவீதம் |
|---|---|---|---|---|
| குடியிருப்புகள் | 18.26 | 83.01 | 12.60 | 71.28 |
| குடியிருப்பு அல்லாதவை | 3.57 | 16.23 | 4.11 | 23.25 |
| மாநில அரசு | 0.16 | 0.70 | 0.91 | 5.14 |
| மத்திய அரசு | 0.01 | 0.06 | 0.06 | 0.33 |
| மொத்தம் | 22.00 | 100.00 | 17.68 | 100.00 |

| விலக்களிக்கப்பட்ட நேர்வுகள் | – | கேட்புத்தொகை |
|---|---|---|
| கல்வி | – | ரூ.1.01 கோடி |
| அறக்கட்டளை | – | ரூ.0.40 கோடி |

**2.4.8.** 1991–92, 1992–93, 1993–94 ஆம் ஆண்டுகளில் வீட்டுவரி மூலம் கிடைத்த வருவாய் ரூ.15.42 கோடியிலிருந்து ரூ.16.53 கோடியாகும். இது மொத்த வருவாயில், சுமார் 19.24 சதவீதம் ஆகும். 1992–93, 1993–94 ஆம் ஆண்டுகளில் வருவாயின் சத வீதம் குறைந்துள்ளது. (1991–92 ஆம் ஆண்டில் 24.4 சதவீதமாக இருந்த வருவாய் 1992–93 ஆம் ஆண்டில் 21.9 சதவீதமாகவும் 1993–94 இல் 19 சதவீதமாகவும் குறைந்தது) தனிநபர் வருமானம் ரூ.18 முதல் ரூ.19 ஆக இருந்தது. இந்த நிதி ஆதாரத்திலிருந்து கிடைக்கும் தனிநபர் வருமானம் மிகவும் குறைவு ஆகும். வரி விதிக்கப் பெறுபவர் ஒருவர் குறித்த வருமானம் வருமாறு:–

**அட்டவணை 2.37. பேரூராட்சி – வீட்டு வரி – வரி விதிப்பின் மூலம் கிடைக்கும் சராசரி வருமானம்**

| | |
|---|---|
| குடியிருப்பு | ரூ. 69.00 |
| குடியிருப்பு அல்லாதவை | ரூ. 115.13 |
| விகிதாச்சாரம் | 1:1.47 |

குடியிருப்பு அல்லாத கட்டிடங்கள் மீதான வரி குடியிருப்புக் கட்டிடங்கள் மீது விதிக்கப்படுகிற வரியை விடவும் இரண்டு மடங்கு முதல் 3 மடங்கு வரையிலாவது இருக்க வேண்டும். எனவே, குடியிருப்பு அல்லாத கட்டிடங்களிலிருந்து அதிக வரி வருவாய் கிடைக்க வாய்ப்புள்ளது. இந்த வரியின் கீழ் வசூல் அளவு மிகவும் குறைவு; வெவ்வேறு நிலைகளைச் சேர்ந்த பேரூராட்சிகளிடையே 54 சதவீதம் முதல் 69 சதவீதம் வரையில் வரி வசூல் வேறுபடுகிறது. இந்த வரி வருவாய் அளவு எவ்வித உயர்வும் இல்லாமல் மாறாமலேயே உள்ளது.

**2.4.9.** பேரூராட்சிகளில் வரி நிருவாகக் கட்டமைப்பைச் சீரமைப்பது அவசியம் ஆகும். பொதுவாக வரியைத் திருத்தியமைப்பதற்குக் கடந்த 20 ஆண்டுகளாகத் தடை இருப்பதே வரி வசூல் குறைவாக இருப்பதற்குக் காரணம் என்று கூறப்படுகிறது. நகராட்சிகளில் இந்தத் தடை விலக்கிக் கொள்ளப்பட்டுவிட்ட போதிலும், பேரூராட்சிகளில் இத்தடைகளை விலக்கிக் கொள்வதற்கான உத்தரவுகள் இன்னும் வரவில்லை. இருபது ஆண்டுகளாக (அதாவது 4 பொதுச் சீராய்வுகள்) வரி திருத்தியமைக்கப்படாததால் கணிசமான அளவுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. சொத்துக்களின் நடப்பு மதிப்பு அடிப்படையில், பொதுச் சீராய்வினை செயல்படுத்துவது சிரமமாக இருக்கும். ஏனெனில், அவ்வாறு செய்வதால் உயர்வு மிக அதிகமாக இருக்கும். வரி செலுத்துபவர்கள் எதிர்ப்புத் தெரிவிப்பர். மாவட்ட அமர்வுகளில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்கள், வினாப்பட்டிகளுக்குப் பொதுமக்களிடமிருந்தும் முக்கிய பிரமுகர்களிடமிருந்தும் அரசு சார்பற்ற அமைப்புகளிடமிருந்தும் வரப்பெற்ற பதில்கள், ஆழமாக ஆராய்ந்ததில் கிடைக்கப் பெற்ற பொது மக்களின் கருத்து ஆகியவற்றிலிருந்து உள்ளூர் பொது மக்கள் வரியை உயர்த்துவதை விரும்பாமலில்லை என்பது தெரிய வருகிறது. பொதுச் சீராய்வு, முறையாகவும் திட்டமிட்ட வகையிலும் நடைபெறுவதை அவர்கள் விரும்புகின்றனர். பல ஆண்டுகளாக வரி திருத்தியமைக்கப்படாமலிருந்து, திடீரென அதிக அளவில் உயர்த்தப்படுவதை அவர்கள் வெறுக்கிறார்கள். இது குறித்து 1990 ஆம் ஆண்டில் தாமோதரன் குழு ஆராய்ந்தது. பேரூராட்சிகளுக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டதற்குக் காரணம் அரசின் கொள்கையாகும். எங்கெல்லாம் அவ்வாறு வரி விதிப்பைத் திருத்தியமைப்பதைத் தள்ளிப் போட்டுள்ளார்களோ அந்த நேர்வுகளிலெல்லாம் இழப்பீடு வழங்க, அக்குழு பரிந்துரைத்துள்ளது. அவ்வாறு தள்ளிப் போடப்படுவதைத் தடை செய்ய, சட்டங்களும் விதிகளும் தக்க வகையில் திருத்தப்பட வேண்டும். உள்ளாட்சி மன்றங்களின் யாதொரு வரி அல்லது செஸ் அல்லது ஏனைய வரிகள், அரசால் தள்ளுபடி செய்யப்படும்போது அல்லது தள்ளிப் போடப்படும் போதெல்லாம் உள்ளாட்சி மன்றங்களுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்பதற்கு சட்டம் திட்டவட்டமாக வகை செய்யவேண்டும்.

**2.4.10.** பேரூராட்சிகளில் செய்ய வேண்டிய முக்கியச் சீரமைப்பு சொத்து வரியை அறிமுகம் செய்ய வேண்டியது ஆகும். மாநகராட்சிகள்/நகராட்சிகள் என்பதன் கீழ் வரி விதிப்பு, வரி மேல்முறையீடு, வசூல், ஜப்தி நடவடிக்கை ஆகியவை தொடர்பான ஏனைய சீரமைப்புகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்த வேண்டும்.

**2.4.11.** ஆண்டு வாடகை மதிப்பு மற்றும் வரி வீதங்கள் தொடர்பாக மாநில நிதி ஆணையம், கட்டிடப் பரப்பு, மாதாந்திர வாடகை மதிப்பை பரிந்துரைத்துள்ளது. இதனைப் பேரூராட்சிகளும் பின்பற்றலாம். சென்னை, கோயம்புத்தூர், மதுரை போன்ற மாநகராட்சிகளில் ஏற்பட்ட அனுபவத்தின் அடிப்படையில், 3வது ஆண்டின் இறுதியில் வரியைத் திருத்தியமைப்பதற்குப் பதிலாக 3 ஆண்டுகளில் மண்டலம் வாரியாக வரிகள் குறித்த பொதுச் சீராய்வை மேற்கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இக்கருத்தும், வரி நடுவர் மன்றம், கேட்பு அறிவிப்பு முறையைக் கைவிடுதல், பாஸ் புத்தக முறையை அறிமுகப்படுத்துதல், பணம் செலுத்துமிடங்கள் (Counters) மற்றும் வங்கிகள் மூலம் வசூலித்தல், வரி செலுத்தத் தவறியவர்கள் மீது வரித் தண்டலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை எடுத்தல், முறையாக அல்லது முன்கூட்டியே வரி செலுத்துபவர்களுக்கு ஊக்கத்தொகை அளித்தல்,

வரி வசூல் பணியாளர்களுக்கு ஊக்கத்தொகை வழங்கும் முறையைக் கொண்டுவருதல் ஆகியவை தொடர்பாக மாநகராட்சிகள் என்பதன் கீழே கொடுக்கப்பட்ட கருத்துக்கள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்படி செய்யலாம்.

**2.4.12.** சொத்துவரி தொடர்பாக வரையறுக்கப்பட்ட உயரளவு உச்ச வரம்புக்குட்பட்டு, பணி முன்னுரிமையை மனதில் கொண்டு, பணி வரிகளைச் சேர்ந்த கூறுகளின் சதவீதம் குறித்து துறை விரிவாக ஆராயலாம். அரசு, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தில் குறைந்தளவு மற்றும் உயரளவு வீட்டுவரியை வரையறுத்துள்ளது. ஆனால் நகராட்சி மன்றங்களுக்கு உச்ச வரம்பு ஏதும் இல்லை. பேரூராட்சிகளுக்கு ஓராண்டிற்கு குறைந்தளவு 15 சதவீதம் என வரையறுக்கலாம். குறைந்தளவு வீதத்தைவிடவும் ஏற்கனவே அதிக வீதத்தில் வரி விதித்துவந்த பேரூராட்சிகள் அதே வரி வீத அளவைத் தொடர்ந்து வைத்திருக்கலாம்; வரி வீதம் எதையேனும் குறைக்க வேண்டுமாயின், ஆய்வாளரின் ஒப்புதலைப் பெற வேண்டும். மாநகராட்சிகளின் கீழ் பரிந்துரைத்துள்ளவாறு இந்த வரியை இரண்டு கூறுகளாக அதாவது, பொதுநோக்க வரி, பணி வரி என வகைப்படுத்தலாம்.

**2.4.13.** பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

வீட்டுவரி

1. பேரூராட்சிகளில், தமிழ் நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் தற்போது விதிக்கப்படும் வீட்டு வரிக்குப் பதிலாக சொத்து வரி விதிப்பதே இனி செய்ய வேண்டிய முக்கியமான சீர்திருத்தமாகும்.

2. மாநகராட்சிகள்/நகராட்சிகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்ட வரிச் சீர்திருத்தங்களும் வரி மதிப்பீடு, வரி விதிப்பு, மேல் முறையீடு, வசூல், ஜப்தி ஆகியவை குறித்த பரிந்துரைகள், பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

3. பேரூராட்சிகளைச் சேர்ந்த பல்வேறு பகுதிகளுக்குப் பொருந்தக் கூடிய கட்டிடப் பரப்பு அடிப்படையிலான மாதாந்திர வாடகை மதிப்பின் பேரிலான சொத்து வரி வீதங்கள், இணைப்பு எண் 11–இல் விவர அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளன. இவ்வீதங்கள் பேரூராட்சிகளில் பின்பற்றப்படலாம்.

4. பேரூராட்சிகளில் சொத்து வரி பொதுச் சீராய்வை கடைசி ஆண்டின் இறுதியில் ஒரே சமயத்தில் மேற்கொள்ளுவதற்குப் பதிலாக பேரூராட்சிகளைப் பல்வேறு மண்டலங்களாகப் பிரித்து, மூன்றாண்டுகளில் சுழற்சி முறையில், சீராய்வு செய்யலாம்.

5. வரி நடுவர் மன்றம் அமைத்தல், கேட்பு அறிவிப்புகள் அனுப்புவதைக் கைவிடுதல், பாஸ்புத்தக முறையை அறிமுகப்படுத்தல், தொகை செலுத்துமிடங்கள் மற்றும் வங்கிகள் மூலமாக வசூல் செய்தல், வரித் தண்டலர்கள் மூலம் தொடர் நடவடிக்கை எடுத்தல், உரிய காலத்திலும், முன் கூட்டியும் வரி செலுத்துபவருக்கு ஊக்கத் தொகை அளித்தல், அதிகத் தொகை வசூல் செய்த வசூல் பணியாளர்களுக்கு ஊக்கத் தொகை அளித்தல்

ஆகியவை தொடர்பாக மாநகராட்சிகளின் நேர்வில் தெரிவிக்கப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

6. பணி வரியின் கீழ் வரும் கூறுகளை (அதாவது சொத்து வரியில் ஒரு பகுதி) விவரமாகப் பரிசீலித்து சொத்துவரிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச வரம்பிற்குட்பட்டும், பேரூராட்சிகளில் செய்ய வேண்டிய பணியின் முன்னுரிமையைக் கருத்தில் கொண்டும் நிர்ணயிக்கலாம். எனினும், பணி வரியில் குறைந்தது 50 விழுக்காடு குடிநீர் வழங்கலுக்காக ஒதுக்கப்பட வேண்டும்.

7. பேரூராட்சிகளில், கட்டிட பரப்பு அடிப்படையிலான மாதாந்திர வாடகை மதிப்பில் ஆண்டு வாடகை மதிப்பைக் கணக்கிட்டு அதன்மேல் குறைந்தளவு 15 விழுக்காடும் அதிக அளவு 30 விழுக்காடும் ஆண்டு ஒன்றுக்கு பணிவரி உள்ளிட்ட சொத்துவரியாக நிர்ணயிக்கப்படலாம்.

தொழில் வரி

**2.4.14.** பேரூராட்சிகளில் தொழில் வரி விதிக்கப் பெறுபவர்கள் பற்றிய விவரங்கள் வருமாறு:–

அட்டவணை 2.38. பேரூராட்சிகள் – தொழில் வரி விதிக்கப் பெறுபவர்களின் எண்ணிக்கை விவரங்கள்

| | வரி விதிக்கப் பெறுபவர்களின் எண்ணிக்கை (இலட்சத்தில்) | கேட்புத்தொகை (ரூபாய் கோடியில்) |
|---|---|---|
| சம்பளம் வாங்குபவர்கள் | 2.89 | 6.02 |
| கடைகள் மற்றும் நிறுவனங்கள் | 0.68 | 1.23 |
| கம்பெனிகள் | 0.17 | 0.78 |
| வங்கிகள் | 0.03 | 0.27 |
| ஏனைய ஆலோசகர்கள் வழக்கறிஞர்கள், மருத்துவர்கள் | 0.88 | 0.51 |
| மொத்தம் | 4.65 | 8.81 |

**2.4.15.** தற்போதுள்ள சட்டம் அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பொதுவானதாக இருப்பதால் ஏனைய உள்ளாட்சி அமைப்புகளில், அதாவது மாநகராட்சிகளிலும் நகராட்சிகளிலும் பின்பற்றப்படுகின்ற அதே அடிப்படையில் பேரூராட்சிகளிலும் தொழில் வரி விதிக்கப்படுகிறது. சம்பளம் வாங்குபவர்கள் என்ற பிரிவில், வரி விதிக்கப் பெறுபவர்கள் சுமர் 3.77 இலட்சம் பேர் உள்ளனர். சம்பளம் வாங்குவோர் அல்லாத பிரிவில் வரி விதிக்கப் பெறுவோர் சுமார் 0.88 இலட்சம் பேர் உள்ளனர். இந்த சம்பளம் வாங்குவோர் அல்லாத பிரிவில் மருத்துவர்கள், வழக்குரைஞர்கள், ஆலோசகர்கள் முதலியோர் அடங்குவர். இவர்களின் சதவீதம் 2.27 ஆகும். பேரூராட்சிகளுக்கு சம்பளம் வாங்கும் பிரிவினர் மூலம், சுமார் 8.30 கோடியும், ஏனையோரிடமிருந்து சுமார் ரூ.0.51 கோடியும் வருவாய் கிடைக்கிறது. தனி நபர் வருவாயைப் பொறுத்தவரையில், இந்த ஆதாரம் மூலம் கிடைக்கும் வருவாய் 1991–92 இல் ரூ.5 உம்,

1992–93 இல் ரூ.2 உம், 1993–94 இல் ரூ.17 உம் ஆகும். மொத்த வருவாயில் இதன் சதவீதம் 1991–92 ல் 6.4 ஆகவும், 1992–93 இல் 3 ஆகவும், 1993–94 இல் 17.1 ஆகவும் இருந்தது. 1992–93 ஆம் ஆண்டு புதிய சட்டத்தைச் செயல்படுத்தியதால், 1993–94 ஆம் ஆண்டில் வருவாய் உயர்ந்தது.

2.4.16. பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது

> மாநகராட்சிகள் தொடர்பாகச் செய்யப்பட்ட பரிந்துரைகள் அனைத்தும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

வாகன வரி

2.4.17. பேரூராட்சிகள், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் வாகன வரி விதிக்கின்றன. மாவட்ட நகராட்சிகள் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளவாறு, அவை நகராட்சிகள் சட்டத்திற்கு மாறும்போது கால்நடைகள், பார வண்டிகள், வண்டிகள் மீது வரி விதிக்க தகுதியுடையவையாகும். வாகன வரியை அரசு தற்போது ரத்து செய்துவிட்டது. ஏனைய நகராட்சி அமைப்புகள் தொடர்பாகச் செய்யப்பட்ட பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும.

2.4.18. பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

> வாகன வரியை அரசு தற்போது ரத்துச் செய்து விட்டது. இரு சக்கர வண்டிகள் தொடர்பாக மாநகராட்சிகளுக்குச் செய்த பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வேளாண்மை நிலங்கள் மீது வரி

2.4.19. பேரூராட்சிகள், தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ், குறிப்பிட்ட நோக்கங்களுக்காக வேளாண்மை நிலங்கள் மீது வரி விதிக்கத் தகுதியுள்ளவையாகும். தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழும் கூட இந்த வரி விதிக்கலாம். கடந்த 40 ஆண்டுகளில் மிகச் சில பேரூராட்சிகளே இச்சட்டத்தைப் பயன்படுத்தியுள்ளன. இணை மானியத்தைக்கூட பேரூராட்சிகள் பயன்படுத்திக் கொள்ளவில்லை. வேளாண்மை நிலங்கள் பற்றி குறிப்பிட்டுக் கூறாமல், ஒரு பகுதியைச் சேர்ந்த வரி விதிக்கப்படக் கூடிய அனைவருக்கும் மேம்பாட்டுக் கட்டணங்களை விதிக்க இயலும் வகையில், தேவையான திருத்தம் செய்வதன் மூலம் விதித்துறையை மாற்றியமைப்பது பற்றி தாமோதரன் குழு (1990) விவாதித்து, பரிந்துரைத்துள்ளது. பேரூராட்சிகள், நகராட்சிகள் சட்டத்தின் கீழ் வரி விதிப்புக்கு மாறும் போது, அவை தமிழ்நாடு 1994 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ்வரும் இந்த விதித்துறையைப் பயன்படுத்தத் தகுதியற்றவையாகிவிடும்.

யாத்ரீகர்/சுற்றுலா வரி

2.4.20. மாநகராட்சிகள் தொடர்பாகச் செய்யப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

**ஒப்படை செய்யப்படும்/பகிர்ந்தளிக்கப்படும் வருவாய்கள்**

**2.4.21.** பேரூராட்சிகளுக்குக் கிடைக்கும் ஒப்படை செய்யப்படும்/பகிர்ந்தளிக்கப்படும் வரிகள் குறித்த விவரங்கள் வருமாறு:–

**அட்டவணை 2.39. பேரூராட்சிகள் – நிதி ஆதாரங்கள் வாரியான ஒப்படை செய்யப்பட்ட /பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய்கள்**

(ரூபாய் கோடியில்)

| ஆதாரங்கள் | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| முத்திரைத்தாள்கள் மீதான மேல்வரி | 17.68 | 83.54 | 23.43 | 84.83 | 22.47 | 83.82 |
| விற்பனை வரி மீது மேல்வரி | 0.27 | 1.29 | 0.68 | 2.46 | 0.33 | 1.23 |
| உள்ளூர் செஸ்வரி | 0.26 | 1.25 | 0.37 | 1.35 | 0.39 | 1.44 |
| கேளிக்கை வரி | 2.85 | 13.47 | 3.05 | 11.05 | 3.54 | 13.21 |
| சாலை சுங்க இழப்பீடு | 0.01 | 0.07 | 0.03 | 0.13 | 0.03 | 0.11 |
| குத்தகை: கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் | 0.08 | 0.39 | 0.05 | 0.18 | 0.05 | 0.20 |
| பகிர்ந்தளிக்கப்பட்ட வருவாய் மொத்தம் | 21.15 | 100.00 | 27.61 | 100.00 | 26.81 | 100.00 |

**2.4.22.** வருவாய் ஒதுக்கீடு/பங்கீடு, அதாவது கேளிக்கை வரி, முத்திரைத்தாள் தீர்வை மீதான மேல்வரி, விற்பனை வரி மீதான மேல்வரி, சிறு அளவிலான சுரங்கங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் ஆகிய வகையிலான ஒதுக்கீடுகள் மாநகராட்சிகளுக்கும் நகராட்சிகளுக்கும் எந்த அளவுக்குச் செய்யப்படுகின்றனவோ அதே அளவுக்கே பேரூராட்சிகளுக்கும் ஒதுக்கப்படும். ஆயினும், பேரூராட்சிகளுக்கு சாலை சுங்க இழப்பீட்டுத்தொகை அளிக்கப்படுவதில்லை. இவை குறித்து ஏற்கனவே முந்தைய பிரிவுகளில் விவாதிக்கப்பட்டுள்ளது. அப்பிரிவுகளில் செய்யப்பட்ட பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

**2.4.23.** தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு ஊராட்சிகள் சட்டத்தின் கீழ் உள்ளூர் செஸ் வரியும், உள்ளூர் செஸ் மேல்வரியும் பேரூராட்சிகளில் விதிக்கப்பட்டன. தற்போது, பேரூராட்சிகள் 1920 ஆம் ஆண்டு நகராட்சிகள் சட்டத்தின் கீழ் வருவதால் இப்பகுதிகளில் வரி வசூலிக்க இயலாது. இந்த வரிகள், இப்பகுதிகளில் ஏற்கனவே செயலில் இருந்ததால், நகராட்சிகள் தொடர்பாகப் பரிந்துரைக்கப்பட்டவாறு நகராட்சிகள் சட்டத்தில் தக்கவகையில் திருத்தங்கள் செய்வதன் மூலம் அவை தொடர்ந்து வசூலிக்கப்படலாம். உள்ளூர் செஸ் வரி, உள்ளூர் செஸ் மேல்வரித் தொகைகள் பேரூராட்சிகளுக்கு வழங்கப்படலாம்.

**2.4.24.** பரிந்துரைகள்

மாநகராட்சிகள், நகராட்சிகள் தொடர்பாக அளிக்கப்பட்ட அனைத்துப் பரிந்துரைகளும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

மானியங்கள்

**2.4.25.** பேரூராட்சிகளுக்கு பல்வேறு மானியங்களிலிருந்து கிடைக்கும் வருவாய் வருமாறு:–

அட்டவணை 2.40. பேரூராட்சிகள் – மாநில அரசு வழங்கும் மானியங்களின் விவரங்கள்

(ரூபாய் கோடியில்)

| விவரங்கள் | 1991–92 | | 1992–93 | | 1993–94 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| பொது நோக்கத்திற்கு/ குறிப்பிட்ட நோக்கத்திற்கு | 1.01 | 46.73 | 1.34 | 45.90 | 1.17 | 39.24 |
| சாலைகள் | 0.50 | 23.03 | 0.65 | 22.18 | 0.60 | 19.93 |
| பொதுச் சுகாதாரம் | 0.22 | 10.11 | 0.37 | 12.51 | 0.20 | 6.71 |
| மருத்துவம் | 0.01 | 0.48 | 0.01 | 0.20 | 0.01 | 0.47 |
| மதிய உணவு மையங்கள் | 0.00 | 0.06 | 0.00 | 0.14 | 0.00 | 0.13 |
| கல்வி | 0.02 | 0.87 | 0.03 | 1.14 | 0.32 | 10.86 |
| மொத்தம் குறிப்பிட்ட நோக்கத்திற்கானவை | 0.75 | 34.55 | 1.06 | 36.18 | 1.13 | 38.11 |
| ஊக்க மானியங்கள் | | | | | | |
| சிறு சேமிப்பு ஊக்கத்தொகை | 0.01 | 0.44 | 0.05 | 1.95 | 0.15 | 5.11 |
| வீட்டு வரி இணைமானியம் | 0.29 | 13.59 | 0.31 | 10.43 | 0.33 | 10.96 |
| மொத்தம் ஊக்கத்தொகை | 0.30 | 14.03 | 0.36 | 12.38 | 0.48 | 16.07 |
| இழப்பீட்டு மானியங்கள் | 0.10 | 4.69 | 0.16 | 5.54 | 0.20 | 6.59 |
| மானியங்கள் மொத்தம் | 2.16 | 100.00 | 2.92 | 100.00 | 2.98 | 100.00 |

வீட்டு வரி இணை மானியம்

**2.4.26.** ஊராட்சிகளில் வசூலாகும் வீட்டு வரிக்கு இணையாக மானியம் வழங்குவதற்கு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் வகை செய்கிறது. கேரள மாநிலத்திலிருந்து தமிழ்நாட்டுக்கு மாற்றப்பட்ட பேரூராட்சிகளுக்கு இணை மானியப் பயன் அனுமதிக்கப்படுகிறது. மாநிலத்திலுள்ள ஏனைய அனைத்து பேரூராட்சிகளும், வீட்டு வரி இணை மானியம் கோருகின்றன. இது குறித்து, தாமோதரன் குழு (1990) விவாதித்து, நிலை II பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட ஊராட்சிகள், அவற்றின் நிதி நிலைமையை மேம்படுத்தும் வரை இத்தகைய உதவியைத் தொடர்ந்து அளிக்கலாம் என்று பரிந்துரைத்தது. பேரூராட்சிகளில் மூன்றில் இரண்டு பங்குக்கும் அதிகமானவை, இன்னும் ஊரகத் தன்மை வாய்ந்தவையாக இருப்பதாலும், இவற்றில் பெரும்பாலானவை, ஊராட்சிகளாக நிலை இறக்கப்பட வேண்டிய நிலைமையில் இருப்பதாலும் பின்வரும் காரணங்களுக்காக பேரூராட்சிகளுக்கு இணை மானியம் வாயிலாக நிதியுதவி அளிக்க வேண்டியது அவசியமென அறியப்பட்டது.

1. ஊராட்சிகள் நிலை உயர்த்தப்படும் போது, அவை இணை மானியத்தை இழக்கின்றன. வீட்டு வரி வசூலுக்கு இணையான இந்த இணை மானியம், நிலை உயர்த்துவதற்கு முன் இந்த ஊராட்சிகளுக்கு கணிசமான வருவாய் ஈட்டித் தந்தன.

2. பேரூராட்சியாக நிலை உயர்த்தப்பட்டவுடன், அவற்றுக்கு நிருவாக அலுவலர் மற்றும் பணியாளரமைப்புக்கு வகை செய்யப்பட வேண்டும். இது நிருவாகச் செலவை அதிகரிக்கிறது.

**2.4.27.** நிதி ஆதாரங்களைப் பெருக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னரே, இணை மானியத்தை நிறுத்திவிடுவது, நிலை உயர்த்தப்பட்ட பேரூராட்சிகளின் நிதி நிலைமையைப் பெரிதும் பாதிக்கிறது. நிலை உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள், 3 ஆண்டு காலத்திற்கு ஊராட்சிகள் என்ற வகையில் அவை பெற்றுவந்த உதவியைத் தொடர்ந்து பெற அனுமதிக்கப்படலாம். இக்கால அளவுக்குள், அவை தங்கள் நிதி நிலைமையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இதற்கிடையில், பேரூராட்சிகள், நகராட்சிகளுக்குப் பொருந்துகின்ற சொத்து வரியை விதிக்கத் தொடங்க வேண்டும். இருப்பினும் மூன்றாண்டு காலத்திற்குப் பின்னர், ஒரு குறிப்பிட்ட கால அளவுக்கு சிறப்பு தனி நபர் மானியம் மூலமாக இழப்பை ஈடு செய்ய வேண்டும். இதற்கு 1920 ஆம் ஆண்டு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தைத் திருத்த வேண்டியுள்ளது.

**2.4.28.** பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

பேரூராட்சிகளாக நிலை உயர்த்தப்பட்ட ஊராட்சிகள், மூன்றாண்டுகளுக்குள் தங்கள் நிதி நிலையை மேம்படுத்திக் கொள்ள வேண்டும். இம்மூன்றாண்டுகள் வரை ஊராட்சிகளுக்குப் பொருந்தக்கூடிய உதவியைத் தொடர்ந்து பெறத் தகுதியுடையனவாகும். இதற்கிடையில், பேரூராட்சிகள், நகராட்சி மன்றங்களுக்குப் பொருந்தக்கூடிய சொத்துவரியை விதிக்க வேண்டும் இருப்பினும், மூன்றாண்டு காலத்திற்குப் பின்னரும், உதவி தேவையெனத் தெரியவருகின்றபோது, ஒரு குறிப்பிட்ட காலஅளவுக்கு, அரசு சிறப்பு மானியம் மூலமாக, இழப்பை ஈடுசெய்ய வேண்டும். கேரள மாநிலத்திலிருந்து மாற்றப்பட்ட பகுதிகளைப் பொறுத்த வரையில் அவை மாற்றப்பட்ட சமயத்தில் கேரள அரசு அளித்த உதவியைத் தொடர்ந்து பெற அனுமதிக்கப்பட்டதால், இணை மானியம் தொடர்ந்து அளிக்கப்படலாம்.

தூசுபடியாச் சாலை மேற்பரப்புக்கு அரை மானியமும் மேம்பாட்டுக்கான சாலை மானியமும்:

**2.4.29.** அரசு, பேரூராட்சிகளின் சாலை மேம்பாட்டுக்காக ஒவ்வோராண்டும் தனி மானியமும், தூசு படியாச் சாலை மேற்பரப்புக்காக 50 சதவீதம் மானியமும் அளிக்கிறது. நிதி ஒதுக்கீட்டு அளவு மிகக் குறைவாக உள்ளது. ஈடுசெய்யப்படும் அடிப்படையில் ஒரு சில பேரூராட்சிகளுக்கு மட்டுமே இத்தொகையைப் பகிர்ந்தளிக்க இயலும். முன்னதாகவே தொகையைச் செலவிடுவதற்கு இயலக்கூடிய பேரூராட்சிகள் மட்டுமே இம் மாநிலத்தைப் பயன்படுத்திக் கொள்ள இயலும். உண்மையிலேயே இத்தகைய உதவி தேவைப்படும் பேரூராட்சிகளுக்கு இது துணை புரியாது.

பணியாளர்களுக்கு சம்பளம் அளிப்பதற்கே சிரமப்படும் பேரூராட்சிகள் இம்மானியத்தை நினைத்துப் பார்க்க இயலாது.

**2.4.30.** பேரூராட்சிகள் தமக்கு முறையாக சாலை மானியம் அளிக்கப்பட வேண்டுமெனக் கோரிவருகின்றன. உள்ளாட்சி மன்றங்களுக்கு மோட்டார் வாகன வரியிலிருந்து கிடைக்கும் வருமானத்தைப் பிரித்துக் கொடுப்பதற்காக உள்ளாட்சி மன்றங்களிலுள்ள சாலைகளின் நீளத்தைக் கருத்திற் கொள்வதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. மாநில நிதி ஆணையம், கருத்துத் தெரிவித்த நிதிப் பகிர்வுக் கொள்கைகளில் அனைத்து பேரூராட்சிகளின் செயல்பாடு மற்றும் தேவைகள் கருத்தில் கொள்ளப்படும்.

**2.4.31.** சாலை மேம்பாட்டுப் பணிகள், பேரூராட்சிகளுக்கு நீட்டிக்கப்படும் சிறப்புத் திட்டங்களின் கீழ் மேற்கொள்ளப்படலாம். உள்ளாட்சி மன்றங்களின் மூலதன முதலீடு பற்றி இவ்வறிக்கையில் பகுதி III இல் தனியாக விவாதிக்கப்பட்டுள்ளது.

**2.4.32.** பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

1. மோட்டார் வாகன வரி வருவாயிலிருந்து, பிரித்துக் கொடுக்கத்தக்க பொதுத் தொகுப்பு நிதி ஒதுக்கீடு செய்வதற்காக, அனைத்து உள்ளாட்சி மன்றங்களிலுள்ள சாலைகளின் நீளத்தைக் கருத்திற் கொள்ள வேண்டுமெனப் பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளன. மாநில நிதி ஆணையம் பரிந்துரைக்கும் நிதிப் பகிர்வுக் கொள்கைகளில் பேரூராட்சிகளின் செயல்பாடு மற்றும் தேவைகள் கருத்தில் கொள்ளப்பட்டுள்ளன.

2. பேரூராட்சிகளுக்காக வகுக்கப்பட்ட சிறப்புத் திட்டங்களின் கீழ் சாலை மேம்பாட்டுப் பணிகளை மேற் கொள்ளலாம். சாலைப் பராமரிப்புப்பணி சொந்த நிதி ஆதாரங்களைக் கொண்டும், வருவாய்க் கணக்கின் கீழ் அரசிடமிருந்து கிடைக்கும் நிதிப் பகிர்வுகளைக் கொண்டும் மேற்கொள்ளப்பட வேண்டும்.

விளக்கு வசதி மானியம்

**2.4.33.** நலிந்த பேரூராட்சிகள், மின் கட்டணங்களைச் செலுத்துவதற்கு ஏதுவாக விளக்கு வசதிக்காக தனி மானியம் அளிக்கப்படுகிறது. பேரூராட்சிகள் மின் கட்டணங்களைச் செலுத்துவதற்கு உதவியாக, அவற்றுக்கு ஊராட்சிகளுக்கு இணையாக அரசு உதவி அளிக்க வேண்டுமென மாநில நிதி ஆணையம் கருதுகிறது. ஊராட்சிகள் தொடர்பாகச் செய்யப்பட்ட பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும். இருப்பினும், இப்பரிந்துரைகள் பரிசீலிக்கப்பட்டு செயற்படுத்தப்படும் வரை, தற்போது அளிக்கப்படும் விளக்கு வசதி மானியம் தொடர்ந்து அளிக்கப்படலாம்.

2.4.34. பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

மாநிலத்தின் வரி வருவாயிலிருந்து உள்ளாட்சி மன்றங்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கான பரிந்துரை குறித்து முடிவு எடுக்கப்படும் வரை, தற்போது அளிக்கப்பட்டுவரும் விளக்கு வசதி மானியம் தொடர்ந்து அளிக்கப்படலாம்.

வடிகால் மானியம்

2.4.35. வடிகால் கட்டுவதற்காக மூன்றில் இரு பங்கு மானியம் தற்போது பேரூராட்சிகளுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. இந்நிதி ஒதுக்கீடு மிகக் குறைவாக உள்ளது. இத்தகைய பணியை எடுத்துக்கொள்ள பேரூராட்சிகளுக்கு, ஊக்கமளிக்கும் பொருட்டு, சிறப்பு, தேர்வு நிலைப் பேரூராட்சிகள் அனைத்துக்கும் ஆண்டுக்கொருமுறை இணை மானியம் அளிக்கப்படலாம். வரைமுறை, பணியளவு அடிப்படையில் பணிக்குழு இதனைப் பரிசீலித்துள்ளது. இந்த அறிக்கையின் III ஆம் பகுதியில் ஐந்தாண்டுகளுக்கான முதலீட்டுத் தேவையில் சேர்ந்துள்ளது.

2.4.36. பரிந்துரைகள்

மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது.

தற்போது அளிக்கப்படும் மானியம் மிகவும் குறைவாக உள்ளது. போதுமானதாக இல்லை. சிறப்பு நிலை, தேர்வுநிலைப் பேரூராட்சிகள் அனைத்தும், வடிகால் திட்டங்களை எடுத்துக் கொள்வதற்கு ஏதுவாக அவற்றுக்கு ஆண்டுக்கொரு முறை இணை மானியம் அளிக்கப்பட வேண்டும்.

வரி அல்லாத ஏனைய வருவாய்

2.4.37. வரியல்லாத ஏனைய வருவாய் ஆதாரங்கள் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளுக்குக் கிடைக்கும் அதே அளவில் பேரூராட்சிகளுக்கும் கிடைக்கின்றன. மாநகராட்சிகள் என்பதன் கீழ் அளிக்கப்பட்ட பல்வேறு பரிந்துரைகள் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.

2.4.38. வரி அல்லாத ஏனைய வருவாய் ஆதார விவரங்களும், அவற்றிலிருந்து கிடைக்கும் வருமானமும் வருமாறு:

அட்டவணை 2.41. பேரூராட்சி – வரியல்லாத ஏனைய வருவாய் – ஆதாரங்கள் வாரியாக

(ரூபாய் கோடியில்)

| | 1991/92 | | 1992/93 | | 1993/94 | |
|---|---|---|---|---|---|---|
| | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் | தொகை | சதவீதம் |
| அபாயகரமான மற்றும் அருவருக்கத்தக்க தொழில்களுக்கான உரிமக்கட்டணம் | 0.70 | 3.78 | 0.77 | 3.65 | 0.79 | 3.37 |
| ஆக்கிரமிப்புக் கட்டணங்கள் | 0.05 | 0.25 | 0.06 | 0.29 | 0.05 | 0.20 |
| கட்டிட உரிமக் கட்டணங்கள் | 1.19 | 6.46 | 1.27 | 5.95 | 1.32 | 5.69 |
| சுற்றுலா பேருந்துக் கட்டணங்கள் | 0.15 | 0.83 | 0.16 | 0.74 | 0.22 | 0.96 |
| ஏனைய பணிகள் குறித்த கட்டணங்கள் | 1.02 | 5.54 | 1.22 | 5.73 | 1.42 | 6.11 |
| பொருட்காட்சிகளும் விழாக்களும் | 0.22 | 1.18 | 0.24 | 1.12 | 0.28 | 1.18 |
| **மொத்தம்** | **3.33** | **18.04** | **3.72** | **17.48** | **4.08** | **17.52** |
| சொத்துக்களிலிருந்து வருமானம் – (நிலங்கள், கட்டிடங்கள், பூங்காக்கள்) | 0.51 | 2.76 | 0.52 | 2.47 | 0.63 | 2.70 |
| சாலையோர மரங்களிலிருந்து கிடைக்கும் பொருள்கள் | 0.48 | 2.58 | 0.62 | 2.94 | 0.49 | 2.09 |
| அங்காடிகள் | 2.33 | 12.59 | 2.79 | 13.11 | 2.87 | 12.34 |
| கடைகள்/வணிக வளாகம் | 1.12 | 6.05 | 1.32 | 6.23 | 1.69 | 7.26 |
| இறைச்சி வெட்டுமிடங்கள் | 0.16 | 0.89 | 0.18 | 0.82 | 0.21 | 0.91 |
| பேருந்து/வண்டி வாகன நிறுத்துமிடங்கள் | 1.36 | 7.36 | 1.62 | 7.61 | 1.66 | 7.11 |
| கட்டணக் கழிப்பிடங்கள் | 0.11 | 0.59 | 0.17 | 0.80 | 0.15 | 0.64 |
| ஏனைய சொத்துக்களிலிருந்து வருமானம் | 1.28 | 6.95 | 1.65 | 7.78 | 1.58 | 6.78 |
| **மொத்தம்** | **7.35** | **39.77** | **8.87** | **41.76** | **9.28** | **39.83** |
| சிறப்புப் பணிகளிலிருந்து வருமானம் | | | | | | |
| விளக்கு வசதி | 0.12 | 0.65 | 0.07 | 0.35 | 0.07 | 0.28 |
| குடிநீர் வழங்கல் – வடிகால் | 4.23 | 22.87 | 4.87 | 22.91 | 6.04 | 25.95 |
| மருத்துவ நிறுவனங்கள் | 0.05 | 0.25 | 0.09 | 0.40 | 0.10 | 0.43 |
| கழிவு நீர்ப் பண்ணைகள் | 0.07 | 0.37 | 0.08 | 0.39 | 0.12 | 0.53 |
| விற்பனை: கழிவு, குப்பைக்கூளம், உரம் | 0.07 | 0.39 | 0.07 | 0.32 | 0.06 | 0.26 |
| நகரத்திட்டம் | 0.05 | 0.26 | 0.05 | 0.24 | 0.04 | 0.19 |
| ஏனைய பணிகளிலிருந்து வருமானம் | 0.08 | 0.43 | 0.09 | 0.42 | 0.09 | 0.40 |
| **மொத்தம்** | **4.67** | **25.23** | **5.32** | **25.02** | **6.52** | **28.03** |
| பல்வகை வருமானம் | | | | | | |
| முதலீடுகளிலிருந்து வருமானம் | 1.06 | 5.76 | 1.10 | 5.20 | 1.08 | 4.64 |
| உள்ளாட்சி நிதி வைப்பீடுகளிலிருந்து வட்டி | 0.13 | 0.68 | 0.12 | 0.57 | 0.13 | 0.56 |
| காலங்கடந்து விட்ட வைப்பீடுகள் | 0.21 | 1.11 | 0.23 | 1.07 | 0.27 | 1.14 |
| பணிகளுக்கான வசூலிப்புக் கட்டணங்கள் | 0.05 | 0.25 | 0.08 | 0.36 | 0.08 | 0.34 |
| ஏனைய பல்வகை | 1.69 | 9.17 | 1.82 | 8.54 | 1.85 | 7.93 |
| **மொத்தம்** | **3.14** | **16.96** | **3.35** | **15.74** | **3.41** | **14.61** |
| வரி அல்லாதவை மொத்தம் | **18.49** | **100.00** | **21.26** | **100.00** | **23.29** | **100.00** |

**2.4.39. பரிந்துரைகள்**

**மாநில நிதி ஆணையம் பின்வருமாறு பரிந்துரைக்கிறது:**

மாநகராட்சிகள் என்பதன் கீழ் அளிக்கப்பட்ட நிதி ஆதாரப் பெருக்கம் மற்றும் நடைமுறை மாற்றம் தொடர்பான அனைத்துப் பரிந்துரைகளும் பேரூராட்சிகளுக்கும் பொருந்தும்.